# உதகமண்டலம் நகராட்சி

உதகமண்டலம் நகராட்சியில் கடந்த **08.06.2021** அன்று நடைபெற்ற ஜீன்–2021–ம் மாத அவசர கூட்டத்தில் இயற்றபட்ட தீர்மானங்கள் கீழ்கண்டவாறு சமற்பிக்கப்படுகிறது.

1. இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் 04.06.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்க ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான தீட்டுக்கல் உரக்கிடங்கில் பயன்படுத்தப்படும் எரியூட்டும் இயந்திரம், பேலிங் இயந்திரம், ஈரமான கழிவுகளை அரைக்கும் இயந்திரம், உலர் கழிவுகளை பிரித்தல் இயந்திரம் மற்றும் உயிர் எரிவாயு இயந்திரம், உள்பட அனைத்து இயந்திரங்களையும் இயக்கி பராமரிக்கவும், குப்பைகளை தரம் பிரித்து உரமாக்குதல் மற்றும் தூய்மைப் பணிக்கு தனியார் வெளிக்கொணர்வு நிறுவன ஒப்பந்ததாரர் மூலம் 28 பணியாளர்களை கொண்டு பணி செய்தல் | 20.00 |

| **வ. எண்** | **ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம்** |
|---|---|---|
| 1. | திருவாளர்.ஸ்டார் கான்ராக்டர், உதகமண்டலம் எனும் நிறுவனம் மதிப்பீட்டை விட 7.89% குறைவு | திருவாளர்.ஸ்ரீ ஆதித்யா அசோசியேட்ஸ் உதகமண்டலம் எனும் நிறுவனம் மதிப்பீட்டை விட 15.13% குறைவு |
| 2. | திரு.கே.இ.கிருஷ்ணதாஸ், உதகமண்டலம் என்பவர் மதிப்பீட்டை விட 6.58% குறைவு | |
| 3. | திருவாளர்.ஸ்ரீ ஆதித்யா அசோசியேட்ஸ் உதகமண்டலம் எனும் நிறுவனம் மதிப்பீட்டை விட 15.13% குறைவு | |
| 4. | திருவாளர். பிலஷ்சன் குரூப், உதகமண்டலம் எனும் நிறுவனம் மதிப்பீட்டை விட 14.61% குறைவு | |

எனவே மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருவாளர்.ஸ்ரீ ஆதித்யா அசோசியேட்ஸ் உதகமண்டலம் எனும் தனியார் வெளிக்கொணர்வு நிறுவனத்தின் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் அவர்கள் ஏற்பது குறித்து பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **தனி அலுவலர் அவர்கள் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.**
2. **மேலும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்திற்கு பணி உத்தரவும் வழங்கலாம்.**
   **(ந.க.எண். 5681/2019/எச்1)**
   **தீர்மான எண்.2625 – அனுமதிக்கப்பட்டது**

**2.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திரைப்பட படப்பிடிப்பு நடத்த காவல்துறை அனுமதி பெறப்பட்ட பின் காவல் துறை அனுமதியுடன் மனுதாரரிடம் விண்ணப்பம் பெறப்பட்டு நாளொன்றுக்கு கட்டணமாக ரூ.10,000/- ( ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வசூலிக்கப்பட்டு மனுதாரருக்கு படப்பிடிப்பு நடத்த தடையில்லா சான்று வழங்கப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.10381/2021/டிபி3 நாள்.03/06/2021 ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் பராமரிப்பில் உள்ள இடங்களில் படப்படிப்பு நடத்துவதற்கு தடையில்லா சான்று கோரி https:// tnurbanepay.tn.gov.in. ல் விண்ணப்பம் செய்யவும் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து https:// tnurbaneseva.tn.gov.in இணையம் வாயிலாக தடையில்லா சான்று வழங்குவதற்கும் கட்டணங்கள் வசூல் செய்வதற்கும் இணையதளத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திரைப்பட படப்பிடிப்பிற்கு அனுமதி அளிப்பது தொடர்பாக மாநில அரசிதழ் எண்.48 தொழில் வளர்ச்சி துறை நாள்.27/01/2021 ன் படி அரசிதழ் பக்கம் எண்.79 ல் வரிசை எண்.2.5.48 ல் மேற்படி தடையில்லா சான்றுக்கான கால அளவு ஏழு நாட்களாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. என்ற விபரம் தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **தனி அலுவலர் பதிவு செய்யலாம்.**
2. **மேற்கண்ட விபரத்தை மாவட்ட அரசிதழில் வெளியிடலாம், அதற்கான செலவித்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**
   **(ந.க.எண். 4103/2021/எப்1)**
   **தீர்மான எண்.2626 – அனுமதிக்கப்பட்டது**

**3.** உதகமண்டலம் நகராட்சியில் கொரனா வைரஸ் Covid 19 நோய் தொற்று அதிகளவில் பரவி வருவதால் தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகளில் தனிமைப்படுத்த வேண்டி அந்தந்த பகுதிகளை சுற்றி இரும்பு தகட்டினால் ஆன தடுப்புகள் அமைக்க வேண்டியுள்ளது. மேலும் அரசு மருத்துவனை உதகையில் கொரனா வைரஸ் பாதித்தவர்கள் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயளிகளுக்கு போதிய கழிப்பிட வசதிகள் இல்லாத காரணத்தினால் கூடுதலாக தற்காலிக கழிப்பிட வசதிகள் அமைத்து தர மாவட்ட

ஆட்சித் தலைவர் அவர்கள்அறிவுறித்தியதின் பேரில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்திரவின் படி கொரான நோய் தொற்று தாக்கிய பகுதிகளை தனிமை படுத்த இரும்பு தகட்டினால் ஆன தடுப்புகள் அமைத்து தனிமை படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும் அரசு மருத்துவமனையில் தற்காலிக கழிப்பிட வசதி 4 எண்ணிக்கையினை ஏற்படுத்தும் பணிக்கு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்த மதிப்பீட்டின் படி பணியினை உள்ள மேற்கொள்ள பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பணியினை மேற்கொண்டு செய்து முடிக்க கீழ் காணும் விவரம்படி ஒப்பந்தாரர்களிடம் விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த தொகையுடைய ஒப்பந்தாரர் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து ரூ. 3.00 இலட்சம் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் விவரம் | மதிப்பீட்டு பணிகளின் விபரப்படி குறிப்பிட்டுள்ள விலைவிவரம் |
|---|---|---|
| 1. | M/S குளோபல் என்விரோன்மெண்ட் சிஸ்டம் உதகை | 0.82% மதிப்பீட்டினை விட குறைவு |
| 2. | திரு. விஜயராகவன், உதகை | 2.65% மதிப்பீட்டினை விட கூடுதல் |
| 3. | திரு. சந்தோஷ் குமார், உதகை | 3.03% மதிப்பீட்டினை விட கூடுதல் |

அலுவலக குறிப்பு:

1. **மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின் படி பணியினை உடன் மேற் கொள்ள வேண்டியும் கொரோனா நோய் தொற்று பரவலை தடுக்கும் பணியின் அவசியத்தினை கருதியும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பணியினை மேற் கொள்ள உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து ரூ. 3.00 இலட்சம் செலவினம் மேற்கொண்டதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
2. **மேற்படி பணிக்கு தனி அலுவலர் பின்னேற்பும் வழங்கலாம்.**
**(ந.க.எண். 6392/2020/இ5)**
**தீர்மான எண்.2627 – அனுமதிக்கப்பட்டது**

4. கொரோனா வைரஸ் Covid 19 வைரஸ் தற்போது காற்றின் மூலம் பரவி வருவதால் காற்றில் பரவும் கொரான வைரஸ் கிருமிகளை கிருமி நாசினி தெளித்து கட்டுபடுத்தும் வகையிலான இயந்திரம் ஒன்றினை (BHELMISTER) கொள்மூதல் செய்து நகரின்அனைத்து பகுதிகளிலும் காற்றின் மூலம் பரவும் வைரஸ் கிருமிகளை கிருமி நாசினி இயந்திம் மூலம் தெளித்து கட்டுப்படுத்தும் பணியிளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் 06.07.2020ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின் படி இந்நகராட்சியில் காற்றில் கிருமி நாசினி தெளிக்கும் வகையிலான இயந்திரம் (BHELMISTER)

கொள்மூதல் செய்து நகராட்சிக்கு சொந்தமான TN 43 D 9520 டம்பர் பிளேசர் வாகனத்தில் பொருத்தி நகரின் அனைத்து பகுதிகளிலும் காற்றின் மூலம் கிருமி நாசினி தெளிக்கும் பணியிளை மேற்கொள்ள வாகனத்தில் தேவையான மாற்றங்களை செய்து (BHELMISTER) இயந்தித்தினை பொருத்தி கிருமி நாசினி மருந்து சேமிக்கும் 2000 லிட்டர் கொள்ளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க் மற்றும் 15 KVA ஜெனரேட்டரினை பழுது பார்த்து பொருத்தி கிருமி நாசினி தெளிக்கும் (BHELMISTER) வாகனமாக மாற்றும் பணிக்கு ரூ. 6.50 இலசத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து, பணியில் சம்மந்தப்பட்ட கீழ் காணும் பணிகனை உரிய நபர்களிடம் விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர்களின் விலைப்புள்ளிகளை ஏற்று அவர் மூலம் பணிகளை மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் நல்ல நிலையில் முடிக்கப்பட்டு செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | குறைந்த விலைப்புள்ளி தாரர் மூலம் பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளி தாரர் விவரம் | மேற்கொண்ட செலவினம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | BELL MISTER இயந்திரம் கொள்முதல் செய்த வகையில் | – | ரூ.3,54,000/– | திரு.முகமது ஜுபேர் பணி ஆய்வர் அவர்களுக்கு முன்பணமாக ரூ.3,54,000/– கொடுக்கப்பட்டதில் Bharat Havey Electrical Ltd., Ranipet. அரசு சார்பு நிறுவனத்தில் கொள்முதல் செய்து பொருள் ஒப்படைக்கப்பட்டது. |
| 2. | TN 43 D 9520 டம்பர் பிளேசர் வாகனத்தில் ஹைட்ராலிக் விப்டிக் ஆங்கில்களை அகற்றி BELL MISTER இயந்திரத்தினை பொருத்தும் வகையில் பிளாட் பாரம் தயார் செய்து புதிய டயர்கள் கொள்முதல் செய்து பொருத்தி F.C பணிகள் செய்த வகையில் | நீலகிரி ஆட்டோ கேரேஜ் மேட்டுபாளையம் | ரூ,.2,13,360 | – |
| 3 | BELL MISTER | திரு. நசீர் அலி ஊட்டி | ரூ.58977/– | – |

| | | | | |
|---|---|---|---|---|
| | இயந்திரத்தினை கொள்முதல் செய்து ராணிப்பேட்டையில் இருந்து மேட்டுபாளையம் கொண்டு வந்த வண்டி வாடகை மற்றும் BELL MISTER வாகனத்தினை பொருத்தி 2000 ltr சின்டெக்ஸ் டேங்க் கொள்முதல் செய்து பொருத்தி கிருமி நாசி தெளிக்கும் பணிக்கும் உரிய பைப் லைன் இணைப்புகள் செய்த வகையில் | | | |
| 4. | நகராட்சியில் உள்ள 15 கே.வி,ஏ ஜெனரேட்டரினை பழுது பார்த்து TN 43 D 9520 வாகனத்தில் பொருத்தி BEEL MISTER கிருமி நாசினி இயந்திரத்தினை இயக்கும் வகையில் ஜெனரேட்டரினை பொருத்திய வகையில் | M/S சாம்ஜ் எலக்டிரிக்கல்ஸ் ஊட்டி | ரூ. 22064/– | |

அலுவலக குறிப்பு:

1. **கிருமி நாசினி தெளிக்கும் பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு கொரோன வைரஸ் பரவலை தடுக்கும் வகையில் BELL MISTER இயந்திரத்தினை கொள்முதல் செய்து நகராட்சி வாகனம் TN 43 D 9520 ல் பொருத்தி BELL MISTER மூலம் கிருமி நாசினி தொளிக்கும் பணிக்கு உரிய தகுதிச்சான்று பணிகள் , டயர்கள் கொள்முதல் செய்து பொருத்தி பயன்படுத்தும் பணிக்கு ரூ. 6.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின் படி பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் அனுமதித்து மேற்காணும் விபரப்படி செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
2. **மேற்படி பணியில் சம்மந்தப்பட்ட பணிகளை சம்மந்தப்பட்ட நபர்களிடம் விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் செலவினம் மேற்கொண்டதற்கு பின்னேற்பும் வழங்கலாம்.**
**(ந.க.எண். 5794/2020/இ5)**
**தீர்மான எண்.2628 – அனுமதிக்கப்பட்டது**

5. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் சுகாதாரத்துறை செயலாளர் அவர்கள் ஆகியோர்களால் 06/06/2021 அன்று தமிழகம் விருந்தினர் மாளிகையில்

நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் கொரோனா 2 ம் அலையின் தீவிரம் குறையாமல் நாள் தோறும் 500 க்கும் மேற்பட்ட நபர்கள் பாதிக்கப்பட்டு நோய் தொற்று கட்டுப்பாட்டினை தீவிரப்படுத்த வேண்டியதன் அவசியம் கருதி 100 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் தினசரி வீடு வீடாக சென்று காய்ச்சல், இருமல், ஆக்ஸிஜன் அளவு, மற்றும் உடல் வெப்ப நிலை அளவு ஆகியவற்றை களப்பணியாக மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 07/06/2021 அன்று நடத்தப்பட்ட காணொலி காட்சி ஆய்வுக்கூட்டத்தில் 250 நபர்களை 25,250 வீடுகளுக்கு தினசரி கணக்கெடுப்பு மேற்கொள்ள தற்காலிகமாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்படும் விலை விகிதத்தில் நியமித்து களப்பணியினை உடன் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் 250 நபர்களை ஒப்பந்ததாரர் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்படும் விலை விகிதத்தில் 30 நாட்களுக்கு பணி மேற்கொள்ள உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

அதனடிப்படையில் ஏற்கனவே இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் நோய் தடுப்பு பணியினை மேற்கொள்ள 36 நபர்களை நியமிக்க வேண்டிய அவசர அவசியம் கருதி 28/05/2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் திருவாளர்கள் ஸ்ரீ ஆதித்யா அசோசியட்ஸ் உதகை அவர்கள் நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ.614/- என்ற குறைந்த ஊதிய விகிதத்தினை அளித்துள்ளதால் இதனை ஏற்று அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது.

தற்போது நோய் தொற்று வேகமாக பரவி வருவதாலும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி களப்பணிக்கு பணியாளர்களை நியமனம் செய்ய போதிய கால அவகாசம் இல்லாததாலும் இப்பணியினை மேற்கொள்ள வேண்டியதன் அவசர அவசியம் கருதி ஏற்கனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள திருவாளர்கள் ஸ்ரீ ஆதித்யா அசோசியட்ஸ் உதகை, அவர்களிடம் கூடுதலாக 250 நபர்களை களப்பணிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தினையே வழங்க கோரப்பட்டதில் 08/06/2021 தேதிய கடிதத்தின் மூலம் கூடுதலாக 250 பணியாளர்களை களப்பணிக்கு பணியமர்த்த சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி நிறுவனத்திற்கு 250 நபர்களை 30 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக களப்பணிக்கு ஈடுபடுத்த தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. **மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தின்படி ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதால் இதே நிறுவனத்திடம் மேலும் 250 பணியாளர்களை 30 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக களப்பணிக்கு ஈடுபடுத்த தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம். மேற்கண்ட பணியாளர்களின் சம்பளத்திற்கான தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கோரிப்பெறலாம்.**
   **(ந.க.எண். 3261/2019/எச்2.)**
   **தீர்மான எண்.2629 – அனுமதிக்கப்பட்டது**

**6.** இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனம் TNN 6380ற்கு டயர்கள் பொருத்தி 6 வருடங்களான நிலையில் குடிநீர் வாகனத்தின் டயர்கள் மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்படி குடிநீர் வாகனத்தில் அரசு மருத்துவ மனை , நீதிபதி குடியிருப்பு மற்றும் நகரின் பலபகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தறபோது குடிநீர் வாகனத்தின் டயர்கள் பழுதடைந்துள்ளதால் குடிநீர் விநியேகம் செய்யும் பணி பதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. குடிநீர் லாரிக்கு தேவையான டயர்களை ஒப்பந்தப்பள்ளிகள் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணியினை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது மேலும் தேர்தல்

நன்னடத்தை விதி அமுலில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் புதியதாக 6 எண்கள் டயர்கள் வாங்கி பொருத்தும் பணியினை அனுமதித்து சம்மந்தப்பட்ட விற்பானையாளர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளியினை கொடுத்திருந்த நீலகிரி ஆட்டோ கேரேஜ் மேட்டுபாளையம் என்பவர் மூலம் 6 எண்கள் டயர்கள் கொள்முதல் செய்து பொருத்திய வகையில் மேற் கொண்ட செலவினத் தொகை ரூ.149900/ தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. **நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் செலவிடப்பட்ட தொகை ரூ.149900/யை தனி அலுவலர் பார்வையிட்டு பதிவு செய்யலாம்**
   **(ந.க.எண். 7287/2020/இ4.)**
   **தீர்மான எண்.2630 – அனுமதிக்கப்பட்டது**

**7.** இந்நகராட்சிக்குட்பட்டபகுதிகளில் கொரோனா தொற்று (Covid -19) இரண்டாம் அலை காரணமாக வேகமாக நோய் தொற்று பரவி வருவரதால் பொது சுகாதாரப்பிரிவின் மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பொது மக்களின் பாதுகாப்பு கருதி நகராட்சி மூலம் பணியாளர்களை கொண்டு 36 வார்டுகளிலும் வீடு வீடாக உடல் வெப்பநிலை மற்றும் ஆக்ஸிஜன் அளவை கணக்கீடு செய்து நோய் தொற்றின் வீரியத்தை கண்டறியவும் தேவையான 200 தெர்மல்கன்கள் 200 பல்ஸ் ஆக்ஸிஜன் மீட்டர்கள் மற்றும் அதற்கு தேவையான AAA Size பேட்டரிகள் 820 எண்கள் வாங்குவதற்கும் மேற்படி பொருட்களின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்படி பொருட்களை வாங்குவதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது அதன் விபரம் கீழ்கண்டவாறு.

| வரிசை எண. | விலைப்புள்ளிதாரர் பெயர் | தெர்மல்கன் இனம் 1 க்கு | பல்ஸ் மீட்டர் இனம் 1 க்கு | AAA Size பேட்டரிகள் |
|---|---|---|---|---|
| 1 | M/S.மெர்க்குரி சர்வீசஸ் கோவை | 1500/- | 1400/- | 18/- |
| 2 | M/S.சாய் சர்ஜிக்கல்ஸ், கோவை | 1750/- | 1650/- | 20/- |
| 3 | M/S.எஸ்.என்.மெடிக்கல் சிஸ்டம்ஸ் | 1680/- | 1550/- | 19.50/- |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திருவாளர்கள்.மெர்க்குரி சர்வீசஸ் கோவை அவர்களின் விலைப்புள்ளிகள் குறைவாக உள்ளதால் இதனை ஏற்று மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் பொருட்கள் வாங்கி களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான பட்டியல் தொகையினை திருவாளர்கள்.மெர்க்குரி சர்வீசஸ் கோவை அவர்கள் சமர்ப்பித்துள்ளார்கள்.

மேலும் தெர்மல்கன்கள் 200 எண்கள் பல்ஸ் ஆக்ஸிஜன் மீட்டர்கள் 200 எண்கள் மற்றும் AAA Size பேட்டரிகள் 820 எண்கள் வாங்கப்பட்டமைக்கும் அதன் செலவினத்தினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொள்ளப்பட்டமைக்கும் மன்றத்தின் பதிவுக்கு வைக்க மன்றக்கூட்டத்தாள் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

1. **அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டமைக்கு தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண். 3261/2019/எச்2.)**
   **தீர்மான எண்.2631 – அனுமதிக்கப்பட்டது**

8. இந்நகராட்சிக்குட்பட்டபகுதிகளில் கொரோனா தொற்று (Covid -19) இரண்டாம் அலை காரணமாக வேகமாக நோய் தொற்று பரவி வருவதால் பொது சுகாதாரப்பிரிவின் மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பொது மக்களின் பாதுகாப்பு கருதி நகராட்சி மூலம் பணியாளர்களை கொண்டு 36 வார்டுகளிலும் வீடு வீடாக உடல் வெப்பநிலை மற்றும் ஆக்ஸிஜன் அளவை கணக்கீடு செய்து நோய் தொற்றின் வீரியத்தை கண்டறிய தேவையான பேட்டரிகள் 144 எண்கள் வாங்குவதற்கு மேற்படி பொருட்களின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்படி பொருட்களை வாங்குவதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது அதன் விபரம் கீழ்கண்டவாறு.

| வரிசை எண. | விலைப்புள்ளிதாரர் பெயர் | Durocell பேட்டரிகள் இனம் 1க்கு |
|---|---|---|
| 1 | M/S.சன் பேப்பர்ஸ் | 18/- |
| 2 | M/S.சாய் சர்ஜிக்கல்ஸ், கோவை | 20/- |
| 3 | M/S.எஸ்.என்.மெடிக்கல் சிஸ்டம்ஸ் | 19.50/- |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திருவாளர்கள். சன் பேப்பர்ஸ் உதகை அவர்களின் விலைப்புள்ளிகள் குறைவாக உள்ளதால் இதனை ஏற்று மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் பொருட்கள் வாங்கி களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி தெர்மல்கன்கள் பல்ஸ் ஆக்ஸிஜன் மீட்டர்களுக்கு தேவையான பேட்டரிகள் 144 எண்கள் வாங்கப்பட்டமைக்கும் அதன் செலவினத்தினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொள்ளப்பட்டமைக்கும் மன்றத்தின் பதிவுக்கு வைக்க மன்றக்கூட்டத்தாள் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு

1. அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டமைக்கு தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.
   **ந.க.எண். 3261/2019/எச்2.**
   **தீர்மான எண்.2632 – அனுமதிக்கப்பட்டது**

தனி அலுவலர்(ம)ஆணையாளர்,
உதகமண்டலம் நகராட்சி.

# உதகமண்டலம் நகராட்சி

உதகமண்டலம் நகராட்சியில் கடந்த **30.06.2021** அன்று நடைபெற்ற ஜீன்–**2021**–ம் மாத சாதாரண கூட்டத்தில் இயற்றபட்ட தீர்மானங்கள் கீழ்கண்டவாறு சமற்பிக்கப்படுகிறது.

**1.** திரு.வி.ஆனந்த் என்பவர் இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் நிறுத்தும் இடத்திற்கு குத்ததை தொகையாக ரூ.**1,75,000/–**ம் செலுத்தியுள்ளார். இத்தொகை காலங்கடந்த வைப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. எனவே காலங்கடந்த வைப்புக் கணக்கில் இருந்து ரூ.**1,75,000/–** GJV வாயிலாக சரிக்கட்ட தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.அ7/1058/2017)**
   **தீர்மான எண்.2633 – அனுமதிக்கப்பட்டது**

2. இந்நகராட்சியின் பொது நிதியில் கீழ் காணும் பணிகளுக்கு **26.05.2021** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1. | இந்நகராட்சி TN43B2018 வாகனம் பழுது சரி செய்யும் பணி | **1.26** |

| **வ. எண்** | **ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம்** |
|---|---|---|
| 1. | M/S Nilgiri Auto Carriage, Kotagiri Road, Mettupalayam. Rs. 1,24,800/- | M/S Nilgiri Auto Carriage, Kotagiri Road, Mettupalayam. Rs. 1,24,800/- |
| 2. | M/S Mettupalayam Auto Service Centre, Mettupalayam Road, Tiruppur Rs.1,39,600/- | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்தாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
3. **மேற்படி பணியினை அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ4/10880/2020)**

**தீர்மான எண்.2634 – அனுமதிக்கப்பட்டது**

**3.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தீட்டுக்கல் பகுதியில் உள்ள ஜே.எஸ்.எஸ் பள்ளி வளாகத்தில் கொரோனா நோயாளிகள் தங்கி சிகிச்சை அளிக்கும் வகையில் கோவிட்– 19 கெரோனா மையம் சுமார் 150 நோயாளிகள் தங்கவைத்து சிகிச்சை அளிக்கும் வலைகயில் நோயாளிகளை அனுமதிக்கப்பட்டு வருவதினால் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு பள்ளி வாளக குளியளறைகளில் ஹீட்டர் வசதி இல்லாததால் சுடுதண்ணீர் வசதியுடன் குளிளறைகளில் ஹீட்டர் மெஷின்களை பொருத்தி சுடுநீர் கிடைக்கும் வகையில் குடிநீர் குழாய் பணிகள் மற்றும் மின் பணிகளை போர்க் கால அடிப்படையில் செய்து முடிக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுரையுகள் வழங்கியதின் பேரில் மேற்கண்ட பள்ளி வாளகத்தில் உள்ள குளியளறைகளில் 6 எண்கள் கீஸர் மற்றும் அதற்கான குழாய் மற்றும் மின் உதிரிபாகங்கள் வாங்கி பொருத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,30,000/–ன் படி பணியினை உடன் மேற் கொள்ள வேண்டியும் கொரோனா நோய் தொற்று நோயாளிகளை சுகாதாரமான முறையில் சிகிச்சை அளிக்க வேண்டியதின் அவசியத்தினை கருத்தில் கொண்டு பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பணியினை உடன் மேற்கொள்ள நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு பிரிவு 15ன் கீழ் அனுமதித்து கீழ் காணும் விபரப்படியான மின் பணி சம்மந்தப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த தொகையுடைய விலைப்புள்ளி தாரர் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து தொகை ரூ.1,29,828/–யை தொகையை கொரோனா நிதியிலிருந்து செலவினமாக மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் விவரம் | மதிப்பீட்டு பணிகளின் விபரப்படி குறிப்பிட்டுள்ள அனைத்து பணிகளின் மொத்த விலைவிவரம் |
|---|---|---|
| 1. | R,நந்தகுமார் ஒப்பந்ததாரர் B2, ஐஸ்வர்யா கார்டன், உதகை | ரூ.1,14,757/– |
| 2. | லஷ்மி எலக்டிரிக்கல்ஸ் & ஸ்டோர், அப்பர் பஜார், உதகை | ரூ.1,24,792/– |
| 3. | மனீஸ் எலக்டிரிக்கல்ஸ் 21/18, அப்பர் பஜார், உதகை | ரூ.1,26,070/– |

அலுவலக குறிப்பு:

1. **தற்காலிமாக அமைக்கப்பட்ட மேற்படி கொரோனா அவசரசிகிச்சை மையத்தில் நோயாளிகளின் குளியல் வசதிக்காக மேற்படி பணியினை உடன் மேற்கொள்ள நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணியினை செய்து முடித்து கொரோனா நிதியிலிருந்து செலவினம் ரூ. 1,30,000/– யை மேற்கொண்டதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
2. **மேற்படி பணியினை அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு பிரிவு 15ன் கீழ் அனுமதித்து மேற்கொண்டற்கு மன்றம் பின்னேற்பும் வழங்கலாம்.**
3. **மேற்கண்ட செலவினம் மேற்கொள்ளப்பட்ட விபரத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பி SDRF நிதியிலிருந்து கோரிப் பெறலாம்.**
   **(ந.க.எண்.இ5/219/2020–21)**
   **தீர்மான எண்.2635 – அனுமதிக்கப்பட்டது**

**4.** இந்நகராட்சி TN43E1631 Ashok Leylanf (Econand) டேங்கர் லாரியினை கொரோனா நோய் பரவலை தடுக்கும் கிருமி நாசினி தெளிக்கும் வாகனமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனத்தில் கொரோனா முதல் அலையின் போது கிருமி நாசினி தெளிக்கும் **1.50** கு.தி கொண்ட ஸ்பிரே மோட்டார் யூனிட் பொருத்தப்பட்டு கிருமி நாசினி தெளிக்கும் பணிகளை நகர் முழுவதும் கவனித்து வரப்பட்டது. கடந்த ஓராண்டு காலமாக பயன்படுத்தப்பட்டு வந்த ஸ்பிரே மோட்டார் மூன்று முறை பழுது பார்த்து பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது இன்ஜினில் பெரும் பழுது ஏற்பட்டு பழுது பார்த்து பயன்படுத்துவதினால் பழுதிற்கான பெரும் செலவு ஏற்படும் என்பதால் மேற்படி ஸ்பிரே மோட்டார் யூனிட்டை கழிவு செய்து அதற்கு பதிலாக டேங்கர் லாரி **6000** லிட்டர் கொள்ளளவிற்கு ஏற்ப கூடுதல் திறன் கொண்ட இரண்டு ஸ்பிரேகள் கொண்ட **3.5** கு.தி. கொண்ட ஸ்பிரே மோட்டார் யூனிட்டை கொள்முதல் செய்து பொருத்தும் பணிக்கு ரூ.**1,25,000/–**க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி கொரோனா நோய் பரவலை தடுக்க கிருமி நாசினி தெளிக்கு பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் அனுமதித்து உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் செய்து முடித்து ரூ.**1,24,428/–**யை கொரோனா நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **விலைப்புள்ளிதாரர்களின் விபரம்** | **மதிப்பீட்டு சதவீதம் கூடுதல்/ குறைவு** |
|---|---|---|
| 1. | M/S Sams Electricals<br>549/11, Upper Cruzpet,<br>Wellington Post, The Nilgiris Dt | **0.02%** குறைவு |
| 2. | M/S SA Engineering System,<br>13, Pillaiyar Kovil St,<br>Karamadi. | **0.63%** கூடுதல் |
| 3. | M/S, Aish Technologies Pvt Ltd,<br>Chennai. | **0.32%** கூடுதல் |

அலுவலக குறிப்பு:

1. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி கொரோனா நோய் பரவலை தடுக்கும் பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதி கொரோனா நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டு பணியினை செய்து முடிந்ததை தனி அலுவலர் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
2. **மேற்படி பணிக்கு தனி அலுவலர் பின்னேற்பும் வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ4/3207/2021)**
   **தீர்மான எண்.2636 – அனுமதிக்கப்பட்டது**

5. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கோத்திகிரி சாலை முதல் நகர பேருந்து நிலையம் வரை கோடப்பமந்து கால்வாயில் பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைக்கும் பணிக்காக CGF திட்டம் **2019–20**ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.ஆர்.முருகன் அவர்களுக்கு **16.06.2020**–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. கடந்த **08.10.2020** அன்று இரவு அதிக மழை **(62.50**mm) பெயத்தில் கோடப்பமந்து கால்வாயில் சகதிமண் பெருமளவில் படிந்துள்ளதின் காரணமாக கிரீன்பீல்டு பகுதியில் தாழ்வான பகுதியிலுள்ள வீடுகளுக்குள் அதிக அளவிலான மழைநீர் புகுந்து பொதுமக்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் கோடப்பமந்து கால்வாயில் **0–3060** மீ நீளம் படிந்துள்ள சகதிமண் முழுவதும் அகற்றும் பட்சத்தில் தான் கோடப்பமந்து

கால்வாயில் பழைய பழுதடைந்துள்ள குழாய்களை அகற்றி புதிய குழாய்கள் அமைக்க இயலும். எனவே கால்வாய் முழுவதும் உள்ள சகதிமண்ணை அகற்றுவது குறித்து அளவீடு செய்யும் பணியினை அளவுகள் எடுத்து அதன்படி சகதிமண் அளவு கணக்கிடப்பட்டு மண்ணை அகற்றும் இனத்திற்கு ஒப்புதல் பெற உரிய அறிக்கைகளை பெற்று திருத்திய மதிப்பீட்டில் கூடுதல் ஆகும் மதிப்பீடு தயார் செய்து பணியினை மேற்கொள்ளும் வகையில் பணியினைே அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்ட விதிகள் எண்.1920 பிரிவு 15–ன் கீழ் அனுமதித்து பணியினை மேற்கொள்ள தனியார் நிறுவன ஆலோசகர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த தொகையுடைய விலைப்புள்ளி தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து ரூ.1,97,350/– செலவினம் மேற்கொண்டதை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி விபரம் | **Drone camera மூலம் கோடப்பமந்து கால்வாயில் 0–3060m நீளம் படிந்துள்ள மண் மற்றும் சகதி அளவீடு அறிக்கை சமர்ப்பிக்க கி.மீ. ஒன்றுக்கு குறிப்பிட்ட தொகை** |
|---|---|---|
| 1 | SPT Consultancy Services, Chennai | Rs.57,000/- km |
| 2 | TS Associates, Chennai | Rs.63,000/- km |
| 3 | RR Harshi power of water, Chennai | Rs.59,000/- km |

அலுவலக குறிப்பு:

1. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணியினை தொடர்ந்து மேற்கொள்ள கோடப்பமந்து கால்வாய் முழுவதும் ட்ரோன் கேமரா மூலம் படிந்துள்ள சகதி மண் அளவினை அளவீடு செய்து பணியினை மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தினை கருத்தில் கொண்டு பணியினை உடன் மேற்கொள்ள நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன் கீழ் அனுமதித்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து ரூ.1,97,350/– செலவினம் மேற்கொண்டதை தனி அலுவலர் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
2. **மேற்படி பணியினை நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் அனுமதித்து மேற்கொண்டதற்கு தனி அலுவலர் பின்னேற்பு வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/010988/2020)**
   **தீர்மான எண்.2637 – அனுமதிக்கப்பட்டது**

**6.** இந்நகராட்சியின் வரியில்லா இனத்தில் 9/2020 முதல் 3/2021 வரையிலான மாதங்களில் பிடித்தம் செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி தொகை (GST) ரூ.64,63,423/–க்கு கணக்கு தாக்கல் செய்யப்பட்டமைக்கான தொகை ரூ.7000/– ஐ திரு.ஜி.செந்தில்குமார், S.V.கன்சல்டன்ட், 14/A–9 சர்ச் ரோடு, பெட்போர்டு, குன்னூர் அவர்களுக்கு வழங்கவும் தொடர்ந்து 2021–22 வருடங்களுக்கான கணக்கு தாக்கல் செய்யவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) அனுமதிக்கவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிற

அலுவலக குறிப்பு:

1. **GST கணக்கு தாக்கல் உரிய நாளில் மேற்கொள்ளபட வேண்டியது என்பதாலும், இதற்கான நிர்வாக செலவினத்தை உடனுக்குடன் வழங்க வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.அ11/15322/2008)**
   **தீர்மான எண்.2638 – அனுமதிக்கப்பட்டது**

7. இந்நகராட்சியின் பொது நிதியில் கீழ் காணும் பணிகளுக்கு **26.05.2021** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | தீட்டுக்கல் உரக்கிடங்கில் உள்ள 2TPD Dry waste incinerator எரிந்து பழுதானத்தை புதுப்பித்து சீரமைத்தல் பணி | 9.00 |

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|
| 1. | M/S Neptune automation, RSF No.83/3, 84/1, A1, Vaikkal Road, Pallipalayam, Nasiyanur Post, Erode – 638107. அவர்கள் மதிப்பீட்டை விட **0.70%** குறைவு | M/S Neptune automation, அவர்கள் மதிப்பீட்டை விட **0.70%** குறைவு |
| 2. | M/S Green Energy, 75 MGR Nagar, Seelanaikenpatti, Salem – 636201. அவர்கள் மதிப்பீட்டை விட **1.86%** அதிகம் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கியுள்ள M/S Neptune automation, Erode என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
3. **மேற்படி ஏரிகலன் (Incinerator) மூலம் உலர் குப்பைகள் மற்றும் கொரோனா நோயாளிகள் பயன்படுத்தும் கழிவுகளையும் எரித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொண்டு வருவதினால் பழுதான எரிகலன் உடன் பழுது பார்த்து புதுப்பிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் குறைந்த தொகையுடைய M/S Neptune automation, Erode என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்க தனி அலுவலர் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.இ5/3418/2021)**

**தீர்மான எண்.2639 – அனுமதிக்கப்பட்டது**

8. கொரோனா நோய் தொற்றின் இரண்டாம் அலை காரணமாக நகராட்சி மூலம் பணியாளர்களை கொண்டு **36** வார்டுகளிலும் வீடு வீடாக உடல் வெப்பநிலை மற்றும் ஆக்ஸிஜன் அளவை கணக்கீடு செய்து நோய் தொற்றின் வீரியத்தை கண்டறிய தற்காலிகமாக களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு தேவையான அடையாள அட்டைகள் **350** தயாரிக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு

மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது அதன் விபரம் கீழ்கண்டவாறு.

| வரிசை எண. | விலைப்புள்ளிதாரர் பெயர் | அடையாள அட்டை இனம் 1 க்கு |
|---|---|---|
| 1 | M/S.போட்டோ பேலஸ் ஸ்டுடியோ, உதகை, | 70/- |
| 2 | M/S.விஷ்ணு டிஜிட்டல் ஸ்டுடியோ ,உதகை | 85/- |
| 3 | M/S.ஆரா ஜெராக்ஸ் ,உதகை | 80/- |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திருவாளர்கள். போட்டோ பேலஸ் ஸ்டுடியோ, உதகை அவர்களின் விலைப்புள்ளிகள் குறைவாக உள்ளதால் இதனை ஏற்று மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் அடையாள அட்டைகள் தயார் செய்து களப்பணியாளர்களுக்கு வழங்கி பணிகள் செய்து முடிக்கப்பட்டது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டமைக்கு தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.**
   **(ந.க.எண். 3261/2019/எச்2)**
   **தீர்மான எண்.2640 – அனுமதிக்கப்பட்டது**

9. இந்நகராட்சி துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு தடை செய்யப்பட்ட பகுதி அனுமதியில்லாமல் யாரும் உள்ளே வரக்கூடாது என வாசகம் கொண்ட பேனர்கள் 200 எண்கள் மற்றும் 50 பக்கங்கள் கொண்ட A3 புத்தகங்கள் 120 எண்கள் வாங்கி முன்களப்பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளில் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | விலைப்புள்ளி பெயர் விலாசம் | பேனர்கள்/ புத்தகங்கள் ஒன்றுக்கு | தேவையான அளவு | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர். குட்லக் பிரிண்டிங் பிரஸ் அப்பர் பஜார், உதகை | பேனர்கள் – ரூ.120/– | 200 எண்கள் | ரூ.24,000/– |
| | | புத்தகங்கள் – ரூ.170/– | 120 எண்கள் | ரூ.20,400/– |
| 2 | திருவாளர். சன் கிரப்பஸ், மெயின் பஜார், உதகை | பேனர்கள் – ரூ.130/– | 200 எண்கள் | ரூ.26,000/– |
| | | புத்தகங்கள் – ரூ.208/– | 120 எண்கள் | ரூ.24,960/– |
| 3 | திருவாளர்.மாடன் பிரண்டர்ஸ், அப்பர் பஜார், உதகை | பேனர்கள் – ரூ.127.50/– | 200 எண்கள் | ரூ.25,500/– |
| | | புத்தகங்கள் – ரூ.195/– | 120 எண்கள் | ரூ.23,400/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளி திருவாளர். குட்லக் பிரிண்டிங் பிரஸ் அப்பர் பஜார், உதகை அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி பொருட்கள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளில் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பேனர்கள் 200 எண்கள் மற்றும் புத்தகங்கள் 120 எண்களும் வாங்கி முன்கள பணியாளர்களுக்கு விநியோக செய்து பணிகள் முடிக்கப்பட்டது, மேற்படி செலவினம் மேற்கொள்ளப்பட்டமைக்கு தனி அலுவலர் பார்வைக்கும் பதிவுக்கும் வைத்து தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு :

1. **அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15 ன் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டமைக்கு தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.**
   **(ந.க.எண். 3261/2019/எச்2)**
   **தீர்மான எண்.2641 – அனுமதிக்கப்பட்டது**

10. உதகமண்டலம் நகராட்சி தீட்டுக்கல் உரக்கிடங்கில் 60 டன் எடைமேடை (Weigh bridge) அமைப்பதற்காக ரூ.18.00 இலட்சத்திங்கு மதிப்பீட் தயாரிக்கப்பட்டு நகர மன்ற தீர்மான எண்.1892/ 31.01.2020–ல் அனுமதி பெறப்பட்டு M/S Bas Instruments & Technology அவர்களுக்கு 01.05.2020–ல் பணி ஆணை வழங்கப்பட்டு தற்பொழுது பணி முடிக்கப்பட்டுள்ளது. 60 டன் எடை மேடை அமைப்பதற்கு மதிப்பீட்டில் Pile foundation அமைப்பதற்காக வழிவகை செய்யப்பபட்டுள்ளது. ஆனால் பணி மேற்கொள்ளும் போது எடை மேடை Weigh அமைக்கும் பகுதியில் குப்பைகள் கொட்டி இருப்பதால் அவ்விடத்தில் மண்ணின் தன்மைக்கு ஏற்ப bridge பொருத்தும் நிறுவனத்தின் தொழில் நுட்ப ஆலோசகர் Pile foundation–க்கு பதிலாக Raft foundation அமைத்து பணி மேற்கொள்ளவதற்கான வரைபடம் வழங்கி அதன்படி பணி மேற்கொள்ளப்பட்டது. எனவே ஏற்கனவே உள்ள மதிப்பீட்டில் உள்ள இனங்களான Steel மற்றும் M20 கான்கிரீட் ஆகிய இனங்கள் மதிப்பீட்டை விட கூடுதல் அளவு பணி மேற்கொள்வதால் கூடுதலான செலவினம் ரூ.47,605/– (2.65%) ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட கூடுதலான தொகைக்கு அனுமதி வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **பணி நடைபெறும் இடத்தின் தன்மைகேற்ப Pile foundation க்கு பதில் Raft foundation ஆக பணி மேற்கொண்டுதால் ஏற்பட்ட கூடுதல் அளவு பணிகள் தேவையின் அடிப்படையில் மேற்கொண்டதாலும், கூடுதலான செலவினம் ரூ.47,605/– மதிப்பீட்டு தொகையில் 5 சதவீத தொகைக்குள்ளாகவே உள்ளதால் பணியின் அவசியத்தினை கருதியும், பணியின் தன்மையினை கருத்தில் கொண்டு கூடுதல் செலவுத் தொகை ரூ.47,605/– யை அனுமதித்து நகராட்சி வருவாய் நிதியின் மூலம் செலவினம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **தீர்மான எண்.2642 – அனுமதிக்கப்பட்டது**

11. இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் கீழ் காணும் பணிகளுக்கு 26.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | மினி கார்டன் மற்றும் பாதாள சாக்கடை திட்ட, நீருந்து நிலைய இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஆட்கள் விநியோகம் செய்தல | 14.00 |

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|
| 1. | M/S Blesson Group அவர்கள் மதிப்பீட்டை விட 5.18% குறைவு | M/S Blesson Group அவர்கள் மதிப்பீட்டை விட 5.18% குறைவு |
| 2. | M/S Sams Electricals அவர்கள் மதிப்பீட்டை விட 0.06% குறைவு | |
| 3. | M/S Mony Engineering அவர்கள் மதிப்பீட்டை விட 6.00% அதிகம் | |
| 4. | M/S Sripathi Brothers Services அவர்கள் மதிப்பீட்டை விட 496.56% அதிகம் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்தாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம். (ந.க.எண்.1596/2021/இ5)**

**தீர்மான எண்.2643 – அனுமதிக்கப்பட்டது**

**12.** இந்நகராட்சியின் தீட்டுக்கல் உரக்கிடங்கில் இயந்திர அறையின் மேற்கூரை தகடுகள் (G.I. Sheet roof) மிகவும் பழுதடைந்துள்ளதால் மழை காலங்களில் பணியாளர்கள் மேற்கண்ட இயந்திர அறையில் பணி மேற்கொள்ள இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே பழுதடைந்த மேற்கூரையை புதுப்பித்து, பழுதடைந்த Side wall பிளாஸ்ட்ரிங் செய்து மேலும் மேற்கண்ட அறையினை வர்ணம் பூசி புதுப்பித்தும் மிகவும் அவசியமானதாகும். மேற்கண்ட பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.27.50/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி தொகையை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
3. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதையும் தனி அலுவலர் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.3418/2021/இ5)**

**தீர்மான எண்.2644 – அனுமதிக்கப்பட்டது**

**13.** நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் குடிநீர் விநியோகம் மற்றும் நகர் பகுதிகளில் 20க்கும் மேற்பட்ட இடங்களில் மின்மோட்டார்களை இயக்குவதற்கும் தற்பொழுது நகராட்சி குடிநீர் பிரிவில் 15 நபர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். மேலும் பார்சன்ஸ்வேலி நீரேற்றும் நிலையம் மற்றும் நகரில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்ய

நகரில் 6 நீரேற்று நிலையங்கள் உள்ளன. நீரேற்று நிலைங்களில் உள்ள மின் மோட்டார்களை 24 மணி நேரம் இயக்க வேண்டியுள்ளது. போதிய பணியாளர்கள் இல்லாததால் நீரேற்று நிலையத்திலிருந்து நகர பகுதிகளுக்கு சரி வர குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே மின் மோட்டார்களை இயக்க ஒப்பந்த அடிப்படையில் Pump operator 6 எண்கள் நியமித்து பணி செய்ய வேண்டியுள்ளது. அதற்கான மதிப்பீடு தொகை ரூ.13,50,000/– க்கு (ஜீலை 2021 முதல் மார்ச் 2022 வரை) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணியாளர்கள் அமர்த்தவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி குடிநீர் சம்மந்தப்பட்ட பணியாக உள்ளதால் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்படி பணிக்கு ரூ.13,50,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**
3. **மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதையும் தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**

**(ந.க.எண்.4666/2021/இ5)**

**தீர்மான எண்.2645 – அனுமதிக்கப்பட்டது**

**14.** இந்நகராட்சிக்குட்பட்ட **36** வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்பொழுது நகராட்சி குடிநீர் பிரிவில் **15** நபர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். மேலும் பார்சன்ஸ்வேலி நீரேற்றும் நிலையம் மற்றும் நகரின் அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும் பணிகள் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளை மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் குடிநீர் சம்மந்தமான பணிகள் மற்றும் குடிநீர் சரிவர விநியோகம் செய்யும் பணிகளை உரிய காலத்தில் மேற்க்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. எனவே குடிநீர் பணிகளின் அவசியம் கருதி ஏற்றுள்ள அடிப்படையில் தண்ணீர் விநியோகம் செய்ய (Turn Cock) கூடுதலாக **6** எண்கள் அமர்த்த்வும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.13,50,000 (ஜீலை 2021 முதல் மார்ச் 2022 வரை) அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்படி பணிக்கு ரூ.13,50,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**
3. **மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதையும் தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**

**(ந.க.எண்.4665/2021/இ5)**

**தீர்மான எண்.2646 – அனுமதிக்கப்பட்டது**

**15.** இந்நகராட்சியின் பொது நிதியில் கீழ் காணும் பணிகளுக்கு **26.05.2021** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | தீட்டுக்கல் உரக்கிடங்கு மெஷினரி ஷெட் மேற்கூரை சீரமைத்தல் கிரில் வசதி செய்தல் மற்றும் தீயணைப்பு கருவிகள் பொருத்துதல் பணி | 27.50 |

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|
| 1. | M/S Murali & Co அவர்கள் மதிப்பீட்டை விட **15.54%** அதிகமாக வழங்கி, பின்னர் இந்நகராட்சியின் விலைகுறைப்பு கடிதத்தை ஏற்று விலைகுறைப்பு செய்து கொடுத்ததில் மதிப்பீட்டை விட **4.86%** கூடுதலாக வழங்கியுள்ளார். | M/S Murali & Co அவர்கள் மதிப்பீட்டை விட **15.54%** அதிகமாக வழங்கி, பின்னர் இந்நகராட்சியின் விலைகுறைப்பு கடிதத்தை ஏற்று விலைகுறைப்பு செய்து கொடுத்ததில் மதிப்பீட்டை விட **4.86%** கூடுதலாக வழங்கியுள்ளார். |
| 2. | M/S Green Energy, 75 MGR Nagar, Seelanaikenpatti, Salem-636201 அவர்கள் மதிப்பீட்டை விட **0.06%** குறைவு | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்படி பணிக்கு ஒப்பந்தாரர் தனது ஒப்பந்த புள்ளியில் மதிப்பீட்டினை விட 15.54 சதவிகிதம் கூடுதல் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளியினை சமர்ப்பித்து இருந்தார். இவ்வலுவலக கடித ந.க.எண்.இ5/3418/2021 நாள்.07.06.2021ன் படி விலைகுறைப்பு செய்து தர கோரியதில் ஒப்பந்ததாரர் தனது 08.06.2021ம் தேதியே கடிதத்தில் கட்டுமான பணியாட்கள் கிடைப்பது கடினமாகவும் பொருட்களின் விலைவிபர ஏற்றம் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் முதலியன அதிக அளவில் ஏற்படுவதால் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ளவிலை விபரத்தினை குறைத்து கொடுத்துள்ளார் அதன்படி ஒன்று முதல் பன்னிரெண்டு இனங்களுக்கு விலைவிபரத்தினை குறைத்து கொடுத்துள்ளார் அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் (L1) குறைவாக உள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்த புள்ளியின் விலை விபரம் 4.86 சதவிகிதம் மதிப்பீட்டு தொகையினை விட கூடுதல் தொகை வரப் பெற்றுள்ளது.**
2. **மேலும் மேற்படி பணிக்கு முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதில் காலதாமதம் ஏற்படுவதை கருத்தில் கொண்டும் பணியின் தன்மையினை கருத்தில் கொண்டும் கட்டுமான பொருட்களின் இரும்பு மேற்க்கூரை தகடுகள் சிமெண்ட் முதலிய பொருட்களின் மார்க்கெட் விலை விபரத்தினை கருத்தில் கொண்டும் தற்போது மழைகாலமாக உள்ளதால் மெஷினரி ஷெட்டின் மேற்க்கூரை பழுதானத்தை உடனடியாக மாற்றி மெஷினரிகளை பாதுகாத்து அன்றாடம் குப்பைகளை கையாளும் பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டினைவிட கூடுதல் தொகை 4.86 சதவிகிதம் நகர் மன்ற அதிகார வரம்பிற்குட்பட்ட சதவிகித**

**தொகைக்குள் இருப்பதால் பணியின் தன்மையினை கருத்தில் கொண்டு விலை குறைப்பு விலை விபரத்தின் படி (L1) குறைவான தொகையுள்ள ஒப்பந்ததாரான திருவாளர்கள் முரளி அண்ட் கோ உதகை என்பவரது 4.86% சதவிகிதம் கூடுதல் தொகையினை ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.இ5/3418/2021)**

**தீர்மான எண்.2647 – அனுமதிக்கப்பட்டது**

**16.** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உங்கள் தொகுதியில் முதல்வர் முகாமில் பெறப்பட்ட மனுவின் மீது நடவடிக்கை மேற்கொண்டதில் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் மேல்தங்காளம் தெரு பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் கழிப்பிடத்தின் சுவர்கள், இருக்கைகள், கதவுகள் மற்றும் தரைதளம் ஆகியவை பழுதடைந்து பொதுமக்கள் உபயோக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட கழிப்பிடத்தை சீர் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/4169/2021)**

**தீர்மான எண்.2648 – அனுமதிக்கப்பட்டது**

**17.** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உங்கள் தொகுதியில் முதல்வர் குறைதீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட மஞ்சனக்கொரை பகுதியில் ஜல்லிகுழி செல்லும் சாலையில் மழை நீர் தேங்கி நிற்பதாலும் மழைநீர் செல்வதற்கு போதிய கால்வாய் மற்றும் கல்வெர்ட்டுகள் இல்லாத காரணத்தினால் மழைநீர் அனைத்தும் சாலையில் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. மனுதாரர் கோரிக்கையின் அடிப்படையில் ஜல்லிகுழி அச்சாலையில் மழைநீர் செல்வதற்கு சாலையின் ஓரத்தில் கான்கிரீட் தளம் அமைக்கவும் மற்றும் சிறுபாலம் அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.13,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.13.00 இலட்சத்தினை நகராட்சி நிதியின் மூலம் மேற்கொள்ள நகராட்சியின் நிதி நிலை தற்போது திருப்திகரமாக இல்லாத காரணத்தால் அரசின் சிறப்பு திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்கீடு பெற்று பணியினை மேற்கொள்ள உரிய கருத்துருக்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/4395/2021)**

**தீர்மான எண்.2649 – அனுமதிக்கப்பட்டது**

**18.** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உங்கள் தொகுதியில் முதல்வர் குறைதீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுவின் படி பொதுக்கழிப்பிடத்தினை பழுது பார்த்து தரக் கோரியதின்படி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21ல் செயிண்ட் மேரீஸ்ஹில் பகுதியில் உள்ள பொதுகழிப்பிடம் மிகவும் பழுதடைந்து கழிப்பிடத்தின் சுவர்கள் மற்றும் இருக்கைகள், கதவுகள் மற்றும் மேற்கூரை தரைதளம் ஆகியவை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள்

உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட கழிப்பிடத்தை பராமரிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9,25,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/4171/2021)**

**தீர்மான எண்.2650 – அனுமதிக்கப்பட்டது**

**19.** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உங்கள் தொகுதியில் முதல்வர் குறைதீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுவின் படி பொதுக்கழிப்பிடத்தினை பழுது பார்த்து தரக் கோரியதின் அடிப்படையில் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் பேபி ஹால் பகுதியில் உள்ள நகராட்சி பொதுகழிப்பிட்டத்தினை கள ஆய்வு செய்ததில் கழிப்பிடத்தின் சுவர்கள், இருக்கைகள் மற்றும் கதவுகள், தரைதளம் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் உபயோகிக்க இயலாமல் உள்ளது. எனவே மேற்கண்ட கழிப்பிடத்தை பராமரிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,80,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/4394/2021)**

**தீர்மான எண்.2651 – அனுமதிக்கப்பட்டது**

**20.** நகராட்சி எல்லைக்குட்பட்ட HMT சாலை சந்திப்பில் இருந்து நொண்டிமேடு செல்லும் சாலையில் உள்ள சாலையானது மிகவும் பழுதடைந்து மழைநீர் அனைத்தும் சாலையில் தேங்கி நிற்பதால் அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து விடுகிறது மற்றும் பொதுமக்கள் அச்சாலையில் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. தற்பொழுது பருவமழை தொடங்க உள்ளதால் மீண்டும் அப்பகுதியில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்கள் செல்வதற்கு மாற்று சாலை வசதியும் கிடையாது, மேலும் அப்பகுதி மக்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அடிக்கடி புகார்கள தெரிவித்து வருகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி அச்சாலையில் மழைநீர் தேங்காமல் இருப்பதால் தற்காலிகமாக wmm மண் மூலம் சாலை சமன் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,70,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.**
3. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும், தற்போது தென்மேற்கு பருவமழை துவக்க நிலையில் பாதையில் மழைநீர் தேங்கி பொதுமக்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுவதினால் பணியினை உடன் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப் புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/3842/2021)**

**தீர்மான எண்.2652 – அனுமதிக்கப்பட்டது**

21. இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யவும் மற்றும் நகர் பகுதியில் 11 இடங்களில் உள்ள மோட்டார்களை இயக்கவும் மற்றம் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் விநியோகப் பணி செய்ய பணிக்கு தற்போது நகராட்சியில் குடிநீர் பிரிவில் நபர்கள் மட்டும் நிரந்திர பணியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். இது தவிர பார்சன்ஸ்வேலி மூன்று நிரேற்று நிலையங்கள் உள்ளன. இவற்றில் இருந்து அனைத்து நகர் பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாததால் நீரேற்று நிலையத்தில் இருந்து நகர் பகுதிக்க சரிவர குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை உள்ளது. மேற்கண்ட இடங்களில் உள்ள நீரேற்று நிலையத்தில் இருந்து வார்டு பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் 6 நபர்களை நியமித்து பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதீப்பீட்டுத் தொகை ரூ.18.60/– இலட்சத்திற்கு குடிநீர் நிதியில் செலவு செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்கண்ட பணிக்கான செலவுத் தொகை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிடலாம்.**
2. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
3. **நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி கோரி கடிதம் வரையவும்.**
   **(ந.க.எண்.இ5/4706/2021)**

**தீர்மான எண்.2653 – அனுமதிக்கப்பட்டது**

22. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.7ல் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான இரண்டு குடியிருப்புகள் உள்ளன. இந்த இரண்டு குடியிருப்பில் கதவு எண் 63 என்ற குடியிருப்பின் தரைத்தளம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் மழைகாலங்களில் ஈரக் கசிவு ஏற்படுகிறது. இதனால் குடியிருப்பில் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. மேலும் குடியிருப்பில் பூச்சு மிகவும் பழுதடைந்தும் மற்றும் சமையல் அறையில் சமையல் பொருள்கள் வைப்பதற்கான Slabகள் பழுதடைந்து உள்ளது. இதனை தவிர சமையல் கழிவு நீர் செல்ல திறந்த வெளிக் கால்வாய் மூடியுடன் அமைக்க வேண்டியது அவசியம் ஆகும். எனவே மேற்கண்ட குடியிருப்பின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.75/– இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்கண்ட பணிக்கான செலவுத் தொகை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிடலாம்.**
2. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/4703/2021)**

**தீர்மான எண்.2654 – அனுமதிக்கப்பட்டது**

23. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7ல் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான இரண்டு குடியிருப்புகள் உள்ளன. இந்த இரண்டு குடியிருப்பில் கதவு எண். 64 என்ற குடியிருப்பின் தரைத்தளம் மிகவும் பழுதடைந்து உள்ளது. இதனால் மழைக் காலங்களில் தரையில் ஈரக் கசிவு ஏற்படுகிறது. எனவே தரைத்தளத்திற்கு flooring tiles அமைக்கவும். மேலும் குடியிருப்பில் சமையல் அறையில் சமையல் பொருள்கள் வைப்பதற்கான Slabகள் அமைக்கவும், இந்த குடியிருப்பில் உள்ள கதவுகள் மிகவும் பழுதடைந்து உள்ளது. இந்த கதவுகளை புதிதாக அமைக்க வேண்டும். எனவே மேற்கண்ட குடியிருப்பு பராமரிப்பு பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6.65/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு தொகை செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**

2. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/4702/2021)**

**தீர்மான எண்.2655 – அனுமதிக்கப்பட்டது**

24. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள மார்லிமந்து சாலையில் உள்ள பாரஸ்கேட் அருகில் உள்ள கன மாரியம்மன் வீடு செல்லும் சாலையில் உள்ள மண் திட்டானது மழையினால் சரிந்து விட்டது. இதனால் சாலையின் அகலம் குறைந்து உள்ளது. தற்போது இச்சாலை ஆனது சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்க உள்ளதால் இச்சாலையில் மழையினால் மண் தீட்டு இடிந்து விழும் என்பதால் இந்த சாலையின் ஓரத்தில் உள்ள மண்திட்டை சரியாமல் தடுக்க தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே மேற்கண்ட சாலையின் ஓரத்தில் உள்ள கருமாரியம்மன் கோவில் பின்புறம் நகராட்சியின் Sintex tax இருகிறது உள்ள மண்திட்டு சிமெண்ட் சாலையில் சரியாமல் இருக்க தடுப்புச்சுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.76/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு தொகையை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
2. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/4704/2021)**

**தீர்மான எண்.2656 – அனுமதிக்கப்பட்டது**

25. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7ல் Stone house பகுதியில் sub urban primary health centre ஆனது தற்போது புதிதாக வேலைகள் செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. ஆனால் இந்த கட்டிடத்திற்கான பாதாளச் சாக்கடை இணைப்பு இல்லாததால் இந்த Health centreக்கு வரும் பொது மக்களுக்கு மிகவும் சிரம்மப்படுகின்றனர். மேலும் இந்த Health centreக்கு பின்புறம் உள்ள குடியிருப்பு பகுதியில் இருந்து வரும் பாதாளச் சாக்கடை இணைப்பு இல்லாததால் திறந்த வெளியில் செல்கிறது. எனவே மேற்கண்ட urban primary health centreக்கு வரும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் பின்புறம் உள்ள குடியிருப்பில் உள்ளவர்களின் பயன்பாட்டிற்கு புதிய பாதாளச் சாக்கடை பைப் லைன் மற்றும் மேன் ஹோல் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே மேற்கண்ட பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.95/– இலட்சத்திற்கு நகராட்சியின் பாதாளச் சாக்கடை நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு செலவு தொகை ரூ.9.95/– இலட்சத்தினை நகராட்சி பாதாளச் சாக்கடை நிதியில் செலவிடலாம்.**
2. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/4705/2021)**

**தீர்மான எண்.2657 – அனுமதிக்கப்பட்டது**

26. இந்நகராட்சியின் தீட்டுக்கல் உரக்கிடங்கில் 26.04.2021 அன்று மாலை 7.00 மணியளவில் மின் கசிவின் காரணமாக திடீரென தீ விபத்து ஏற்பட்டதில் இயந்திர அறையில் உள்ள 30 எண்கள் LED விளக்குகள், Wiring மற்றும் Hydrayulic pressing machine ஆகியவை பழுதடைந்துள்ளது. LED விளக்குகள் மற்றும் wire முழுவதுமாக எரிந்து உபயோகிக்க இயலாத வண்ணம் பழுதடைந்துள்ளது. Hydraulic pressing machine 5HP Induction motor with hydraulic pump, panel board, wiring இயந்திரத்தின் உள்

பகுதியிலுள்ள micro switches ஆகியவை பழுதடைந்துள்ளது. இயந்திரஅறையில் (Resource recovery centre)ல் குப்பைகளை பிரிக்கும் பணிகள் மற்றும் Incenerator இயந்திரம் Bailing machine shredding machine ஆகியவை இயக்கப்படுவதால் மாலை 4.00 மணிக்கு மேல் இப்பகுதியில் வெளிச்சம் குறைந்து விடுவதால் பணி மேற்கொள்ள பணியாளர்கள் மிகுந்த சிரமப்படுகிறார்கள். எனவே மேற்கண்ட அறையில் 30 எண்கள் LED விளக்குகள், switches மற்றும் Hydralic pressing machine ஆகியவற்றை பழுது நீக்கம் செய்வது மிகவும் அவசியமானதாகும். இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவின தொகை ரூ.4.95/— இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை உடனே மேற்கொள்ள தனி அலுகூலர் அவர்களின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி மதிப்பீடு தொகையினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/4621/2021)**

**தீர்மான எண்.2658 – அனுமதிக்கப்பட்டது**

27. இந்நகராட்சியின் தீட்டுக்கல் உரக்கிடங்கில் 26.04.2021 அன்று சுமார் மாலை 7.00 மணியளவில் மின் கசிவின் காரணமாக திடீரென தீ விபத்து ஏற்பட்டதில் இயந்திர அறையில் உள்ள medium voltage distribution panle board, LT cable பதிக்க உபயோகப்படுத்திய covering குழாய்கள் ஒயர்கள் ஆகியவை முற்றிலுமாக எரிந்து பழுதடைந்துள்ளது. தற்பொழுது Incenerator, Bailing machine ஆகிய இயந்திரங்களுக்கு செல்லும் LT cable எரிந்துள்ளதால் மின் கம்பி இணைப்புகள் இல்லாமல் உள்ளது. எனவே தற்பொழுது Incenerator மற்றும் Bailing machine, Trommel, feeder conveyer, organic palvariser ஆகிய இயந்திரங்களை இயக்க இயலாத சூழ்நிலை உள்ளது. தற்பொழுது கொரோனா தொற்று அதிக அளவில் உள்ளதால், தினசரி குப்பைகளை ஆன்றன்றைக்கு தரம் பிரிப்பது மிகவும் அவசியமானதாகும். எனவே இயந்திர அறையில் எரிந்து பழுதடைந்துள்ள medium voltage distributon panel board, LT cable, LT cable covering pipe மற்றும் earth connection ஆகிய இனங்களை கொண்டு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.50/— இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.**
2. **மேலும், மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி மதிப்பீடு தொகையினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/4622/2021)**

**தீர்மான எண்.2659 – அனுமதிக்கப்பட்டது**

28. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மஞ்சனகொரை பகுதியில் தகன உலை எரிவாயு மயானம் அமைந்துள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கை கடித

எண்.Roc.No.5437/J2/2020-26, நாள்.**10.06.2021**–ன்படி Covid-19 கொரோனா நோய் தொற்றினால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகாரித்து வருவதினால், கொரோனா நோய் தொற்று காரணமாக இறந்தவர்களின் உடல்களை தகன உலை எரிவாயு மயானத்தில் எரிப்பது குறித்தும், இறந்தவத்களின் உடல்களை எரிப்பதில் எவ்வித புகார்களும் வாரத வண்ணம் தகன உலை எரிவாயு மயானத்தினை கண்காணிப்பதற்காக உடனடி தேவையான கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி நல்ல முறையில் எரிவாயு மயானங்களை பாரமரிக்கப்பட வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டின் அடிப்படையில மஞ்சனகொரை எரிவாயு மயானத்தில் எட்டு எண்ணிக்கையிலான கண்காணிப்பு கேமரா, Hard disk மற்றும் தேவையான உதிரி பாகங்கள் சப்ளை செய்து பெருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**1,90,000**/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
2. **மேற்படி மதிப்பீடு தொகை செலவினத்தினை பேரிடர் மேலாண்மை நிதி (Covid - 19) நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/4701/2021)**

**தீர்மான எண்.2660 – அனுமதிக்கப்பட்டது**

**29.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **36** வார்டு பகுதிகளிலும் தெருவிளக்கு பராமரிப்பு பணியில் சோடியம் ஆவி விளக்குகள் CFL விளக்குகள் மற்றும் உயர்மின் கோபுர விளக்குகளின் சோடியம் ஆவி விளக்குகள் அனைத்தையும் மின் கட்டணம் சேமிப்பு காரணமாக **2016–2017** ஆம் ஆண்டில் LED விளக்குகளாக மாற்றம் செய்யப்பட்டதின் காரணமாக கீழ்காணும் விபரப்படி விளக்குகளை LED விளக்குகளாக மாற்றியதின் பொருட்டு சோடியம் ஆவி விளக்குகளின் பிட்டிஸ் மற்றும் CFL விளக்குகளின் பிட்டின்ஸ் இருடில் வைக்கப்பட்டு பழுதான நிலையில் மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், உபயோகமற்ற மேற்படி பிட்டிஸ்ஸ்களை பாதுகாப்பதில் ஏற்படும் சிரமத்தினை கருத்தில் கொண்டும். இனி பழைய சோடியம் பிட்டிஸ்ஸ்களை பயன்படுத்தப்படாத நிலையில் அதனை இருப்பிற்கு கொண்டு வந்து உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்தின் அடிப்படையில் பொது ஏலம் மூலம் அப்புறப்படுத்த தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பழுதான இருப்பில் உள்ள பழைய பிட்டிஸ்ஸ்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு பிட்டிஸ்ஸ்கள் (பல்பு. சோக்கு, ரூம், கவர் ரூஸ்களாக) | – | 859 எண்ணிக்கை |
| 2. | 150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு பிட்டிஸ்ஸ்கள் (பல்பு. சோக்கு, ரூம், கவர் ரூஸ்களாக) | – | 125 எண்ணிக்கை |
| 3. | உயர்மின் கோபுர 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு பிட்டிஸ்ஸ்கள் (பல்பு. சோக்கு, ரூம் ) | – | 142 எண்ணிக்கை |
| 4. | CFL விளக்கு பிட்டிஸ்ஸ்கள் (பல்பு. சோக்கு) | – | 60 எண்ணிக்கை |

அலுவலக குறிப்பு :

1. **தற்போது அனைத்து தெரு விளக்குகளையும் LED தெருவிளக்குகளாக மாற்றம் செய்து தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளை கவனித்து வருவதினால் கடந்த நான்கு வருடங்களாக இருப்பில் உள்ள உபயோகமற்ற சோடியம் ஆவி விளக்குகளின் பிட்டிஸ்ஸகளை மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் அதனை பாதுகாப்பதின் அவசியத்தினை கருத்தில் கொண்டு உபயோகமற்ற பழுதான பிட்டிஸ்ஸ்களை பொது ஏலம் மூலம் அப்புறப்படுத்தி அதன் மூலம் நகராட்சி**

**கணக்கில் வரவு வைத்து பயன்படுத்தி கொள்ள மேற்படி உபயோகமற்ற பிட்டிஸ்ஸ்கள் பொது ஏலம் மூலம் அப்புறப்படுத்த தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண்.இ5/4217/2021)**

**தீர்மான எண்.2661 – அனுமதிக்கப்பட்டது**

**30.** நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய மஞ்சனகொரை பகுதியில் 7 குடியிருப்புகள் உள்ளதால் அப்பகுதியில் உள்ள மக்கள் தொலைதூரம் உள்ள பகுதிக்கு சென்று கிணற்றில் இருந்து குடிநீர் எடுத்து வருகிறார்கள். இதனால் அப்பகுதி மக்கள் மிகவும் பாதிப்பு அடைகிறார்கள். எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் துணை ஆதார குழய்கள் 1" விட்டமுள்ள 1100 மீட்டர் நீளத்திற்கு அமைக்கபட வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட இடத்திற்கு குடிநீர் துணை ஆதார குழாய்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,70,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி குடிநீர் பணியாக உள்ளதால் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கண்ட பணியினை மேற்கொள்ளலாம்.**
   **(ந.க.எண்.இ3/4484/2021)**

**தீர்மான எண்.2662 – அனுமதிக்கப்பட்டது**

**31.** மாண்புமிகு உங்கள் தொகுதி முதல்வர் முகாமில் பெறப்பட்ட மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ள திருமதி.சித்ரா, புட்சர்ஸ் தெரு மற்றும் திரு,சசியுல்லா, புட்சர்ஸ் தெரு பகுதி நேரில் ஆய்வு செய்யப்பட்டது. இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் குழாய்கள் அமைக்கப்பட்டு சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இக் குழாய்கள் 4" விட்டமுள்ளதாக உள்ளளதால் தற்பொழுது மனுதாரரின் வீட்டின் மேல்பகுதியில் சுமார் 8 குடியிருப்புகளின் கழிவுநீரும் இதே குழாய்களில் செல்வதால் அடிக்கடி அடைப்பு ஏற்படுகிறது. எனவே மனுதாரரின் வீட்டின் மேல் பகுதியிலுள்ள வீடுகளின் கழிவுநீரை தனியாக கழிவு நீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் அமைத்து அருகிலுள்ள பொது நடை பாதையில் அமைந்துள்ள கழிவுநீர் தொட்டியில் இணைப்பதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.50/– இலட்சம் ஆகும், மேற்படி தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/4548/2021)**

**தீர்மான எண்.2663 – அனுமதிக்கப்பட்டது**

**32.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட எல்கில், ரோஜா பூங்கா (விஜய நகரம்) மிஷினரி ஹில், ஏடிசி ஜங்ஷன்,ஸ்டேட் பேங்க காலனி, குல்முகமது சாலை மற்றும் ஐயப்பன் கோயில் முன்புறம் ஆகிய இடங்களில் கழிவுநீர் குழாய்கள் மற்றும் கழிவுநீர் தொட்டிகள் பழுதடைந்துள்ளதால் ஆங்காங்கே குழாய்கள் உடைந்து கழிவுநீர் வெளியேறுவதால் பொதுமக்கள் நடைபாதையை கடக்க சிரமப்படுவதோடு சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டியினை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.80/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
3. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையாளர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/4547/2021)**

**தீர்மான எண்.2664 – அனுமதிக்கப்பட்டது**

**33.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மத்திய பேருந்து நிலையம் ராஜீவ் காந்தி சிலை மற்றும் சேரிங்கிராஸ் பகுதியில் மகாத்மா காந்தி சிலை அமைக்கப்பட்டு மேற்படி சிலையானது பாதுகாப்பின்றி திறந்த வெளியில் இருப்பதால் சிலையின் பாதுகாப்பிற்காக சிலையை சுற்றி இரும்பு வேலி அமைத்து தர கோரி காவல் துறையினர் கோரியுள்ளனர். எனவே மேற்கண்ட இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு இரண்டு சிலைகளின் பாதுகாப்புக் கருதி இரும்பு வேலி அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.20/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
3. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையாளர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/2968/2021)**

**தீர்மான எண்.2665 – அனுமதிக்கப்பட்டது**

**34.** திருமதி . ஜி . மேபல் கமலா , அவர்களால் இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண் W.P. No .29800/2019 ன் 26-04-2021 ம் தேதிய தீர்ப்புரையின் மீது சட்டக்கருத்து அனுப்ப தெரிவிக்கப்பட்டதற்கிணங்க திரு.எம் . வேணுகோபால் , சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் அவர்களின் 24-06-2021 ம் தேதிய கடிதத்துடன் மேற்படி வழக்கின் தீர்ப்பின் மீதான சட்டக்கருத்து அனுப்பபட்டுள்ளது . மேலும் அதற்கான கட்டண தொகை ரூ . 3000/- வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது . எனவே மேற்படி தொகை ரூ . 3000/- அன்னாருக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு :

**அனுமதிக்கலாம்**

**(ந.க.எண் : சி1 /10994/2019)**

**தீர்மான எண்.2666 – அனுமதிக்கப்பட்டது**


**35.** உதகமண்டலம் நகராட்சியின் 2020–2021ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்து தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

**1. ஒப்புதல் வழங்கலாம்.**

**(ந.க.எண் : சி1 /3287/2021)**

**தீர்மான எண்.2667 – அனுமதிக்கப்பட்டது**



**தனி அலுவலர் (ம)ஆணையாளர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**